செய்தி வெளியீடு எண்: 26 நாள்: 21.03.2018

**தேனி மாவட்டம்,**
**பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட டி.வாடிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 48 பயனாளிகளுக்கு ரூ.25,53,956/- மதிப்பிலான தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்**

******

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட டி.வாடிப்பட்டி கிராமத்தில் (21.03.2018) இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், வருவாய்த்துறையின் சார்பில், விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 40 பயனாளிகளுக்கு தலா ரூ.61,000/- வீதம் ரூ.24,40,000/- மதிப்பிலான வீட்டுமனைப்பட்டாக்களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.3,386/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரத்தினையும், விலையில்லா தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.4,235/- வீதம் ரூ.8,470/- மதிப்பிலான தேய்ப்பு பெட்டிகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.37,100/- மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.65,000/- மதிப்பிலான மரக்கன்றுகளையும் என மொத்தம் 48 பயனாளிகளுக்கு ரூ.25,53,956/- மதிப்பிலான தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளையும், மேலும், மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணையினையும், பட்டா மாறுதல் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும், 5 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ்களுக்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பயன்களை வழங்கி தெரிவிக்கையில், மக்கள் தொடர்பு முகாம் என்பது மாவட்டத்தில் ஏதேனும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து 15 தினங்களுக்கு முன்பே அக்கிராமத்திற்கு சென்று பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து, கிராமத்திற்கு அரசினால் செயல்படுத்தப்பட வேண்டிய வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து கண்டறிந்து அதனை நிறைவேற்றும் முகாமே மக்கள் தொடர்பு முகாம். இம்முகாமின் மூலம் அரசின் திட்டங்களை பெற என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதனை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காகவும் இம்முகாம் நடத்தப்படுகின்றது.

தமிழக அரசு ஏழை, எளிய மக்களின் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காக எண்ணற்ற பல மக்கள் நலத்திட்டங்களையும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசு படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், நிலையான வருவாயினை ஏற்படுத்திடவும் பல்வேறு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதிய தொழில் புரிய விருப்பமுள்ளவர்கள் சந்தையில் பொருளுக்கான தேவை என்ன, பொருளின் முக்கியத்துவம் அறிந்து அதன் விற்பனை இடங்கள், உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களை கண்டறிந்து குறைந்த செலவில் எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை கணக்கிட்டு தொழில் தொடங்கிட வேண்டும். புதிய தொழில் முனைவோர்களுக்கு வங்கிகளே தனியாக பயிற்சி அளித்து வங்கிக்கடனாக நீட்ஸ் திட்டத்தின் மூலம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி வரை 25 சதவீத மானியத்தில் கடனுதவியும் அளித்து வருகிறது. வங்கிக்கடன் பெற்ற தொழில் முனைவோர்கள் முறையாக வங்கிக்கடனை திருப்பிச் செலுத்தும் போது எதிர்காலத்தில் உங்களுடைய தொழில் அபிவிருத்திக்குத் தேவையான நிதியினை வங்கிகள் அளிக்க முன் வரும்.

மாணவ, மாணவியர்களின் ஏழ்மையின் காரணமாக அவர்களின் கல்வி எந்த ஒரு சூழ்நிலையிலும் தடைபடக் கூடாது என்பதற்காக கல்வி ஊக்கத்தொகை, விலையில்லா பாட புத்தகம், நோட்டுப்புத்தகம், வருடத்திற்கு நான்கு ஜோடி சீருடைகள், காலணிகள், புத்தகப்பை, வடிவியல் பெட்டிகள், வரைபட புத்தகங்கள், கிரையான்ஸ், கணித உபகரணங்கள், பேருந்து பயணஅட்டை, விலையில்லா சைக்கிள், மடிக்கணிகளை வழங்கி வருகிறது.

மேலும், பொதுமக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும், பாதுகாப்பற்ற முறையில் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு மாசு ஏற்படுத்துவதை தவிர்க்கும் பொருட்டும், திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் நோய் பரவுதலை தடுப்பதற்கும், சுகாதாரத்தினை மேம்படுத்திடவும், பொதுமக்கள் தங்களின் குடியிருப்புகளில் கழிப்பறைக்கு தேவையான இடவசதி இருந்தால் தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கு ரூ.12,000/- அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்தி, திறந்த வெளியில் மலம் கழிப்பற்ற சூழ்நிலையை நாம் தான் உருவாக்கிட வேண்டும். சுத்தமான, சுகாதாரமான வாழ்வினை நாம் வாழும் பொழுது தொற்று நோய்கள் நம்மை பரவாமல் இருக்கும்.

தமிழக அரசு விவசாயிகளின் நிலையை கருத்தில் கொண்டு, எண்ணற்ற வேளாண் சார்ந்த திட்டங்களை தீட்டி செயலபடுத்தி வருகிறது. அதனடிப்படையில், தமிழக அரசு நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைத்திட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத அரசு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத அரசு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் நுண்ணீர் பாசனத்திட்டத்தினை முறையாக மேற்கொண்டு விவசாயம் செய்திட வேண்டும். தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை கொண்டு பொதுமக்கள் தங்கள் வாழ்வில் வளம்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.முகம்மது அப்துல் நசீர் அவர்கள், மகளிர் திட்ட அலுவலர் திரு.கல்யாணசுந்தரம் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கிஷோர்குமார் அவர்கள், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.சண்முகசுந்தரம் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.கார்த்திகேயன் அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.ரசிகலா அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.கிருஷ்ணவேனி அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி.ராஜராஜேஸ்வரி அவர்கள், மாவட்ட தொழில் மைய மேலாளர் திரு.ராமசுப்பிரமணியன் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**